2026 ஆகஸ்ட் மாதம் 06– ஆம் தேதி வியாழக்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 4/2025

2026–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 06– ஆம் தேதி வியாழக்கிழமை திருமதி.ட.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW3 (LW3) – மாவீரன் |
| தகப்பனார் பெயர்: | சின்னச்சாமி |
| ஊர்: | சின்ன ஓவுலாபுரம் |
| வட்டம்: | உத்தமபாளையம் |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | கூலிவேலை |
| வயது : | 42 |

06.08.2026

(எதிரி நீதிமன்ற காவல் மூலம் ஆஜர்படுத்தப்பட்டார். எதிரியின் வழக்கறிஞரும் ஆஜர்).

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசாரால் அவரது ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டு ஒப்பீடு செய்யப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

1. நான் தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், சின்ன ஓவுலாபுரம் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய கூலிவேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி எனக்கு தெரியும், எனது மாமன் மகன் ஆவார். அ.சா.1 எனது அத்தையாவார், அ.சா.2 எனது மாமா ஆவார். சுமார் 2 வருடங்களுக்கு முன்னர் 2 வது மாதம் எதிரி அ.சா.2–டம் செய்முறை செய்ய ரூ.50,000/– பணம் கேட்டார். அ.சா.2 பணம் கொடுத்தார். மீண்டும் அதே மாதம் ரூ.10,000/– எதிரி அ.சா.2–டம் கேட்டார். அதற்கு அவர்களுக்குள் வாக்குவாதம் ஏற்பட்டது.

சண்டையில் எதிரி கத்தியை எடுத்து அ.சா.2–யை குத்திவிட்டார். அதனால் அவருக்கு முதுகு, வயிற்றுப்பகுதிகளில் காயம் ஏற்பட்டது.

2. சத்தம் கேட்டு, சென்று பார்த்தோம். நாங்கள் சென்று பார்த்தப்போது, எதிரி சம்பவ இடத்தில் இருந்தார். அப்போது அ.சா.2 ரத்த வெள்ளத்தில் இருந்தார். நான், முத்துப்பாண்டி, அ.சா.1 எனது அத்தை, அ.சா.2–யை சின்னமனூர் அரசு மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்ஸ் மூலம் அழைத்துச் சென்றோம். போலீசார் அங்கு வந்து விசாரித்தார்கள். அ.சா.1 சம்பவம் குறித்து புகார் வாக்குமூலம் கொடுத்தார். நானும், போலீசாரிடம் வாக்குமூலம் கொடுத்தேன். அதன் பின்னர் மேல்சிகிச்சைக்காக க.விலக்கு அரசு மருத்துவமனைக்கு அ.சா.2 யை அழைத்துச் சென்றோம். அங்கு அ.சா.2 சுமார் 15 நாட்களாக அறுவை சிகிச்சை செய்து உள்நோயாளியாக சிகிச்சை பெற்றார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>**

3. முத்துப்பாண்டி எனக்கு என்ன உறவுமுறை வேண்டும் என்றால் அண்ணன் ஆவார். செய்முறைக்கு பணம் கேட்ட விபரம் யார் சொல்லி எனக்கு தெரியும் என்றால் அ.சா.2 மொக்கைப்பாண்டி சொல்லி எனக்கு தெரியும். மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும்போது நான் உடன் சென்றேன் என்றால் சரிதான். புகார் வாக்குமூலம் கொடுக்கும்போது நான் இருந்தேன் என்றால் சரிதான். அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். சத்தம் கேட்டு நான், முத்துப்பாண்டி சென்று பார்த்தோம் என்றால் சரிதான். எனது வீடு காலனியில் உள்ளது என்றால் சரிதான். சம்பவ தேதி, சம்பவ நேரத்தில் சம்பவ இடத்திற்கு எதற்கு வந்தேன் என்றால் வெண்டி முத்தன் கடைக்கு டீ சாப்பிடுவதற்காக வந்தேன்.

4. சம்பவ இடத்தில் நான் இல்லை என்றாலும், அ.சா.1, அ.சா.2 எனது உறவினர் என்பதால் அவர்களுக்கு அனுசரணையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆம்புலன்ஸில் நான் செல்லவில்லை

என்றாலும், புகார் வாக்குமூலம் பெறும்போது நான் இல்லை என்றால் சரியல்ல. அவ்வாறு இருந்திருந்தால் புகார் வாக்குமூலத்தில் சாட்சி கையொப்பம் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. சம்பவம் எதிரியால் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. அ.சா.2 மருத்துவமனையில் 15 நாட்கள் சிகிச்சையில் இருந்த விபரம் யார் சொல்லி எனக்கு தெரியும் என்றால் எனக்கு நேரடியாக தெரியும். நான் எந்த தேதி செய்முறை வைத்தேன் என்றால் 03.03.2024 ம் தேதியாகும். செய்முறை செய்த தேதியில் நான் வீட்டில் இருந்தேன் என்றாலும், மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> :– இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 06.08.2026 அன்று வியாழக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.08.06 18:35:09 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
06.08.2026